(உ) பரம்பிக்குளம் ஆளியார் திட்ட வேலைகள் முடிவடைவதால், அங்கு வேலை செய்யும் தொழிலாளருக்கு மாற்று வேலைகள் கொடுப்பது குறித்து

திரு. இ. ராமசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பிக்குளம் -ஆளியார் திட்ட வேலைகள் முடிவடைகின்ற தறுவாயில் இருப்பதாலும், பொதுப்பணித் துறையில் வேலை செய்து வரும் தொழிலாளர்கள், வேலை இழக்கவேண்டிய நிலை ஏற்படுமோ என்ற பயமும் பீதியும் தொழிலாள ரிடம் ஏற்பட்டுள்ளதாலும் தொடர்ந்து திட்டப் பகுதியில் வேலை கொடுக் கவோ, அல்லது மாற்றுத் திட்டத்தில் வேலை கொடுப்பது பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, பரம்பிக்குளம் ஆளியார் திட்டத்தில் சுமார் 700 " நிரந்தரமற்ற வேலை நிதியில் ஊதியம் பெறும்" ஊழியர்கள் வேலை செய்கிருர்கள். அவர் களில் மூன்றில் ஒரு பகுதியினர் புல்டோசர், ஸ்கிரேப்பர், ரோலர், தண்ணீர் லாரி முதலியவற்றை இயங்கும் பணியையும், பராமரிக்கும் பணியையும் கவனிக்கின்றனர். மூன்றில் ஒரு பகுதியினர் கல் அணைக்கு சாரம் அமைத்தல், இயந்திரங்களையும் சாமான்களையும் ஓர் இடத்திலிருந்து மற் ருேர் இடத்திற்கு எடுத்துச் செல்லும் அன்ருட வேலைகளைச் செய்கிருர்கள். மீதமுள்ளவர்கள் அநேகமாக சில்லறை மேற்பார்வை வேலைகளை கவ னிக்கும் மேஸ்திரிகளும் தலைமைக் கூலிகளும் ஆவர்.

பரம்பிக்குளம்—ஆளியார் திட்டத்தில் ஒரு சிறு பகுதி வேலையைத் தவிர அனேகமாக எல்லா வேலைகளும் முடிவடைந்துவிட்டன. கால்வாய் வேலைகள் முடிவடைந்து விட்டன. ஆளியார் அணை, திருமூர்த்தி அணை, மலைக் கால்வாய், தூனக்கடவு அணை, பரம்பிக்குளம் அணை ஆகிய வற்றில் வேலைகள் முடிவடைந்துவிட்டன. தற்போது வேலை நடை பெற்று வரும் சோலையார் அணை வேலைகள் இவ்வாண்டு ஜூலை மாதத்தில் முடிவடையும். சமீபத்தில் துவக்கப்பட்ட நீரார் திட்டம் மிகச் சிறிய திட்டமாகும். இதற்கு ஒரு சில "வேலை நிதியின் ஊதியம் பெறும்" ஊழியர்களே போதுமானது. மேல் நீரார் திட்டத்திலிருந்து வெட்ட இருக்கும் சுரங்க வேலை ஒப்பந்தக்காரரின் மூலம் செய்ய இருப்பதால் இதற்கு அதிகப்படியான "வேலை நிதியின் ஊதியம் பெறும்" ஊழியர் கள் தேவைப்படவில்லை.

பெருவாரிப்பள்ளம் அணை வேலைகள் பாதி முடிவடைந்து விட்டன. மீதி வேலைகள் கேரள அரசின் ஒப்புதலுக்கு பின்தான் துவக்கப்படும்.

இனிமேல் துவக்க வேண்டிய மிகப் பெரிய வேலையான கீழ் நீரார் அணைத் திட்டம் கேரள அரசுடன் ஒப்பந்தம் செய்த பிறகு எடுத்துக் கொள்ளப்படும். இதற்கு இன்னும் கொஞ்சம் காலமாகலாம்.

தற்போது உள்ள நிலையில், இவ்வாண்டு ஜூன், ஜூலையில் சோலையார் அணை வேலைகள் முடிவடைந்ததும், "வேலை நிதியின் ஊதியம் பெறும் ஊழியர்களை" குறைக்க வேண்டிய அவசியம் ஏற்படும். மண் வாரி இயந்திரங்கள், மற்ற இயந்திரங்களை இயக்கும் இயக்குநர்களும் பரா மரிப்பவர்களும் அந்த இயந்திரங்களுடன் கடானு, இராமா நதி போன்ற திட்டங்களுக்கு அனுப்பப்படுவார்கள்.

இத்திட்டத்திலுள்ள சில மேஸ்திரிகளையும், தலைமைக் கூலிகளையும் புதிதாக எடுக்க இருக்கும் திட்டங்களுக்கு மாற்றலாம். ஆயினும் பெரும் பகுதி வேலை ஆட்கள் வேலை இழக்க நேரிடும். இவர்களுக்கு தொழிற்தகராறு சட்டப்படி முன் அறிவிப்புடன் நஷ்ட ஈடு அளிக்கப்படும். கீழ் நீரார் திட்டம் பெருவாரிப்பள்ளம் திட்டம் ஆகியவைகளுக்கு கேரள அரசு ஒப்புதல் அளித்து, வேலைகள் துவக்கப்பட்டால் அநேகமாக பெரும்

பகுதி வேலையாட்களுக்கு இத்திட்டத்தில் தொடர்ந்து 2 முதல் 4 ஆண்டுகள் வேலை அளிக்கலாம். அப்படி இல்லையெனில் வேலையாட்களை மற்ற புதிய திட்டங்களுக்கு மாற்றுவது ஓரளவே சாத்தியமாகும். புதிதாக எடுத்துக்கொள்ளும் திட்டங்களில் கூடிய வரையில் புதிய தொழிலாளிகள் சேர்க்கப்படுவதில்லை. பூர்த்தியடையும் திட்டங்களிலிருந்துதான் இப் புதிய திட்டங்களுக்கு தொழிலாளர்கள் எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள். மேற்கூறியபடி பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தில் அமர்த்தப்பட்ட தொழிலாளர்களில் இயந்திர இயக்குநர்களும் பராமரிப்பவர்களும் மற்ற புதிய திட்டங்களுக்கு மாற்றப்படுவர்.

கேரள அரசின் ஒப்புதல் பெற்று கீழ் நீரார், பெருவாரிப்பள்ளம் வேலைகள் துவக்கப்பட்டால் ஒழிய, இவ்வாண்டு ஜூலைக்குப் பின் பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தில் சிறிதளவு வேலையே மீதி இருக்கும். ஆகவே, இத் திட்டத்திலுள்ள மேஸ்திரிகளையும் தலைமைக் கூலிகளையும், கூலி வேலையாட்களையும் இவ்வாண்டு ஜூன், ஜூலைக்குப் பிறகு வேலை நீக்கம் செய்ய வேண்டிய அவசியமேற்படுகிறது.

இது தவிர, இப்படி வேலை நீக்கம் செய்யப்படுகிற ஊழியர்களில் பெரும்பகுதியினருக்கு மாற்று வேலை கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. நீரார் திட்டத்தில் வேலை கொடுப்பதற்கான சூழ்நிலை இருக்கிறது. தலைமைப் பொறியாளர் மூலம் இந்த ஒப்பந்தக்காரர்களிடத்தில் நம்மிடம் பணிபுரிந்து வேலை நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களுக்கு முதல் இடம் கொடுத்து எடுத்துக் கொள்ளப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதைப் பரிசீலித்து நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். கூடுமானவரை வேலை நீக்கம் செய்யப்படுபவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இ. ராமசாமி : பேரவைத்தலைவர் அவர்களே, சிறுபான்மையோர் வேலை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டால், அவர்களுக்கு அரசு போக்குவரத்துத் துறையில், தகுதி வாய்ந்த டிரைவர், சூபர்வைசர் மேஸ்திரி போன்றவர்களை கிளார்க் போன்ற வேலைகளுக்கு போக்குவரத்துத் துறையிலும், இன்னும் பொது சுகாதார துறையிலும் எடுத்துக்கொள்ள பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன். அதே திட்டப் பகுதித் துறையில் இல்லாவிட்டாலும், வேறு பொது சுகாதாரத் துறை, போக்குவரத்துத் துறைகளில் எடுத்துக்கொள்ள அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன். முற்பகல் 11-00

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நான் கொடுத்திருக்கும் அறிவிப்பு பொதுப்பணித் துறை சம்பந்தமானது. மாண்புமிகு உறுப்பினர் வேறு பொது நலத்துறை, போக்குவரத்துத் துறை பற்றிய விளக்கத்தைக் கேட்கிறார்கள். அந்த விளக்கத்தைக் கொடுக்க இயலவில்லை. ஆனாலும் நான் முன்பே கூறியபடி, வேலை நீக்கம் செய்யப்படுவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. அப்படிப்பட்ட தொழிலாளர்கள் பற்றியும் ஒப்பந்தக்காரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, அவர்கள் எடுத்துக்கொள்ளும் நிலை இருப்பதாகச் சொன்னேன். ஆகவே, உறுப்பினர் அச்சம் அடையத் தக்க அளவுக்கு நிலை இருக்காது என்று தெரிவிக்கிறேன்.

(4) அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்.

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIAN : Mr. Speaker, Sir, under Rule 21 (3) of the Legislative Assembly Rules, I move that item III—Government Resolutions— and item (2) in IV— Government